Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

மலர் IV.] 1943-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15உ, வெள்ளிக்கிழமை [இதழ் 7

கூட்டுறவு மூலம் வெற்றி கிடைக்கும்

அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட்.

☆

“ நீங்கள் உங்கள் நாட்டு விடுதலையின் பொருட்டு புரட்சி செய்த ஆண்டு விழாவை முன்னிட்டு, அமெரிக்க ஐக்கிய மாகாண மக்களின் சார்பாக, தங்களையும் சீனப் பெரு மக்களையும் வாழ்த்திப் பாராட்டுகிறேன். மேன்மை தங்கிய தங்களையும் சீன மக்களையும் நாங்கள் எவ்வளவு உயர்வாக மதிக்கிறோம் என்பதைத் தெரிவிப்பதற்கு இது ஏற்ற தருணமாக உதவுகிறது. அக்கிரமக் காரர்களோடு மகா வீரத்தனமாக நீங்கள் நெடுங்காலமாகப் போராடினீர்கள். நேச நாட்டு மக்களோடு சேர்ந்து மேலும் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். நிறைந்த உள்ளத்தினாலும், கூடிச் செயலாற்றுவதனாலும் வெற்றி கிடைக்கும் என்னும் மன உறுதி உங்களுக்கு உண்டு.”

அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் *சீன தேசீய விழாவன்று (அக்டோபர் 10) ஜெனரலாசிமோ ஷியாங்-கெய்-ஷேக்குக்கு விடுத்த செய்தி.*

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV] 1943-ம் ஆண்டு அக்டோபர் மீ 15உ. [இதழ் 7

இத்தாலியில் முன்னேற்றம்

இத்தாலியில் 20 முதல் 25 டிவிஷன் ஜெர்மன் படைகள் இருக்கின்றன. ப்ரென்னென் கணவாய் வழியாக மேலும் வந்துகொண்டிருக்கின்றன. நேச நாட்டுப் படைகள் தெற்கே யிருந்து வடக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்குப் பக்கபலமாக கப்பற் படையும் விமானப் படையும் வெகுவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இத்தாலியின் மத்தியில் தென் வடலாக அப்பினைன் மலைத் தொடர் அமைந்திருக்கிறது. ஆகவே, சமதளம் அதிகமாகக் கிடையாது என்று சொல்லலாம். எனவே, தரைப் படை, போராடுவதற்கு மிகவும் கஷ்டமாகத் தானிருக்கும். இந்த மலைத் தொடரிலிருந்து உற்பத்தியாகும் ஆறு வால்டர்னோ இதன் இரு கரைகளிலும் இப்போது இரண்டு படைகளும் இருந்து கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. சில இடங்களில் நேசநாட்டுப் படையைச் சேர்ந்த சாரணர்கள் ஆற்றைக் கடந்து விட்டதாகவும் தெரிகிறது. இங்கே யிருந்து ரோமாபுரிக்கு சுமார் 80 மைல்கள் இருக்கும். ரோமாபுரி தான் இத்தாலியின் தலை நகரம். இத்தாலியின் உயிர்போன்ற நகரம் என்று கூடச் சொல்லலாம். இதை விரைவில் கைப்பற்ற வேண்டுமென்பது தான் நேசநாட்டுப் படையினரின் பெருமுயற்சி. இந்தப் படையினர் விரைவில் முன்னேறக் கூடவில்லை யானாலும், மெதுவாகவாகிலும் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதுமட்டமல்ல. தாம் கைப்பற்றிய பகுதிகளைத் தமக்குப் பயன்படுத்தத் தக்கவாறு சாதகப் படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

நிற்க, இத்தாலிக்குக் கிழக்கேயுள்ள பால்கன் நாடுகள் மீதும், மேற்கேயும் வடமேற்கேயு முள்ள பிரான்சு மீதும் நேசநாட்டு விமானங்கள் தாக்குவதற்கு இத்தாலி மிகச் சிறந்த தளமாகப் பயன்படுகின்றது. குறிப்பாக, இத்தாலிக்கு மேற்கேயுள்ள சார்டீனியா, கார்சிகா ஆகிய தீவுகள் நேசநாட்டினர் வயப்பட்டு விட்ட படியால், அங்கே தளங்களை யமைத்துக் கொண்டு பிரான்சைத் தாக்குவது மிகவும் எளிது.

இப்போது இத்தாலியில் மழைகால ஆரம்பம். இதைத் தான் ஜெர்மன் படைத் தலைவரான கெசல்ரிங் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். மழைபெய்து வால்டர்னோ ஆற்றில் வெள்ளம் வந்தால், 5-ம் படையின் முன்னேற்றம் தடைப்படும் என்று நினைக்கிறார். எவ்வளவு கஷ்டப்பட்டாவது ரோமாபுரியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பது தான் அவருடைய தலையாய நோக்கம். அவர் ரோமாபுரியை இழந்து விட்டால், இத்தாலியையே இழந்தது போலத் தான். இச்செய்தி ஜெர்மனிக்கும் பால்கன் நாடுகளுக்கும் எட்டினால், ஹிட்லர் மீது உள்ள கொஞ்ச நம்பிக்கையுங் கூட மறைந்துவிடும். ஆகவே தான், இத்தாலியில் மகா கடும் போராடுகிறார்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

இந்திய சிப்பாய்களின் வீரச் செயல்கள்

அக்டோபர் மாதம் 9-ம் தேதி நியூ டில்லியிலிருந்து வெளிவந்த அரசாங்க அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது :—

இந்தியப் படைகளும், இந்திய சமஸ்தானப் படைகளும் நேச நாட்டுப் படைகளுடன் சேர்ந்து இத்தாலியில் போராடிக் கொண்டிருக்கின்றன. மற்ற போர் முனைகளைப் போலவே, இத்தாலியப் போர் முனையிலும், நேச நாட்டுப் படைகள் முன்னேறுவதற்கு இந்தியப் படைகள் மிகப் பெரிதும் உதவிக் கொண்டிருக்கின்றன. மத்திய கிழக்குப் போர் முனையிலும், வட ஆப்பிரிக்கப் போர் முனையிலும், கீழக் கோடிப் போர் முனையிலும், மற்றும் இந்தியப் படைகள் சென்ற எல்லாப் போர் முனைகளிலும் மிக மிகச் சிறந்த முறையில் போராடி யிருக்கிறார்கள். தங்களுக்கு மிகச் சிறந்த புகழ் தேடிக் கொண்டது மட்டுமன்றி, தம் நாட்டிற்குத் தனிப் பெருஞ் சிறப்பையும் பெருமையையும் தேடித் தந்தார்கள். பர்மாவில் ஜப்பானியப் படைகளோடு மிகுந்த வீரத்துடன் போராடியது பற்றி, ஹவில்தார் காஜா க்லே என்பவருக்கு (இப்போது ஜமேதார் பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்) விக்டோரியா பதக்கம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பதக்கம் மிக மிகச் சிறந்த போர் வீரர்களுக்கு மட்டுந்தான் வழங்கப் படுவது. விக்டோரியா பதக்கம் பெற்ற மற்ற இந்தியப் படையினரின் வீரச் செயல்களையும் இது நமக்கு ஞாபக மூட்டுகிறது. இதற்கு முன்பு, பர்மாவில் ஜப்பானியர்களோடு போராடியவர்களில் ஒருவருக்கு மட்டுந்தான் இந்த விக்டோரியா பதக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது இவருக்கு முன்பு இந்தியப் படையினருக்குள் 6 பேர்களுக்கு மட்டுந் தான் இது வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த யுத்தத்தில் முதன் முதல் இந்தப் பதக்கம் பெற்றவர் 2-வது லெப்டினென்டாக இருந்த ப்ரேமேந்திர சிங் பட் (இந்திய இஞ்சினீரிங் இலாகா) இப்போது அவர் மேஜர் பதவியி லிருக்கிறார். அபிசீனியாப் போராட்டத்தில் நம் படைகள் மெடெம்மா என்னுமிடத்தைக் கைப்பற்றியவுடனே, எதிரிப் படைகள் கொண்டார் என்னுமிடத்தை நோக்கிப் பின்வாங்கத் தலைப்பட்டன. அவர்கள் பின் வாங்கிக் கொண்டுபோகும்போதே, தமக்குப் பின்னே, சுரங்க வெடிகளை விரவிக் கொண்டு போயினர். அந்தச் சுரங்க வெடிகளை அப்புறப்படுத்துவதில் மிகத் தீரத்துடன் அவர் வேலை செய்தார் என்பதை முன்னிட்டுத் தான், அப்பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது. இந்த வேலையைச் செய்யும் போது அவருக்குப் பல காயங்கள் பட்டன. என்றாலும் பொருட்படுத்த வில்லை ; மற்றவர்கள் உதவியையும் கோர வில்லை. தன் வேலையிலேயே கண்ணாயிருந்து, தன் கடமையை நிறைவேற்றினார். 15 சுரங்க வெடிகளைக் கண்டு பிடித்து அவற்றை அப்புறப்படுத்தும் வேலையை மேல் பார்த்தார். மகா களைப்படைந்திருந்தார். அவருடைய ஒரு காது ஜவ்வு கிழிந்து போய் விட்டது. தனக்கு அப்போதிருந்த அனுபவம், அந்த வேலையைச் செய்து முடிக்க மிகவும் பயன்படுமென்றும் கூறி, தனக்குப் பதிலாக யாரும் தன் வேலையைச் செய்ய வேண்டியதில்லை யென்று கூறி விட்டார்.

கால் துண்டித்தும் போராடின கெரான் வீரன்.

ஆறாவது ராஜபுதனப் படையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுபேதார் ரிச்பால் சிங் மற்றொரு வீரர். கெரானுக்கு அருகில் எதிரிகளோடு இரண்டு முறை போராடி வெற்றி கண்டார். இது பற்றி உத்தியோக தோரணையில் அறிவிக்கப்பட்டதாவது :—

"நெருப்பு கொட்டிக் கொண்டே யிருந்தது. இந்த வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தரும் இவருடைய 30 சிப்பாய்களும் தம் சனியன்களைக் கொண்டு கடுமையாக எதிரிகளோடு எதிர்த்துப் போராடி, தாம் கோரிய இடத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இப்படிப் போராடிக் கொண்டிருக்கும் போது, அவர்கள் வசமிருந்த வெடிமருந்துக ளெல்லாம் தீர்ந்துவிட்டன. என்றாலும், தம்மை வளைந்து கொண்டிருந்த போதிலும், தாம் மிகவும் கொஞ்சம் பேராக இருந்தபோதிலும், சுபேதார் ரிச்பால் ராமுடைய உணர்ச்சி மிக்க தலைமையில், கடுமையாக போராடி, வெற்றி பெற்றார்கள்."

ஐந்து நாட்களுக்குப் பிறகு, மீண்டும் அதே இடத்தில் பெரும் நெருப்பை எதிர்த்துத் தன் படையை நடத்தி வெற்றியடையும் தருவாயில் அவருடைய கால் ஒன்று துண்டிக்கப்பட்டது. பல காயங்கள் பட்டு மரணமானார்.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

அக்டோபர் 6.—பிரிட்டிஷ் யுத்த மந்திராலோசனை சபைக் கூட்டத்திற்கு ஜெனரல் ஸ்மட்ஸ் விஜயம் செய்தார்.

மூவரசு மந்திரிகள் மகா நாட்டிற்கு மாஸ்கோவிற்கு மிஸ்டர் அந்தனி ஈடன் தன் காரியாலயத்தைச் சேர்ந்த 6 நிபுணர்களை அழைத்துக் கொண்டு போவார்.

அக்டோபர் 8.—கிழக்கு ஆங்கிலியாவிலும், தென் கிழக்கு இங்கிலாந்திலும், லண்டனின் சில பகுதிகளிலும் கூட ஜெர்மன் விமானங்கள் வந்து தாக்கியதன் பயனுகச் சிலர் மடிந்தனர். அநேகர் காயப்பட்டனர்.

ஸ்டட்கார்ட் என்னும் முக்கியமானதோர் தளவாட உற்பத்தி ஸ்தானத்தை பிரிட்டிஷ் விமானப் படை 15-ம் முறையாக நேற்றிரவு மிகக் கடுமையாகத் தாக்கி பெரும் சேதத்தை உண்டாக்கின. அன்றியும் பிரடிரிக்சேபன், மியூனிச் ஆகிய நகரங்களையும் தாக்கி, எதிரி நாடுகளை யடுத்துள்ள கடல்களில் கடற் கண்ணிகளைப் போட்டு வைத்தன.

நேற்றிரவு எதிரி விமானங்கள் கென்ட், எஸ்ஸெக்ஸ் ஆகிய பகுதிகளில் தோன்றி, பிறகு லண்டன் நகரத்தின் எல்லைப்புரத்திலும் தோன்றி சில வெடிகுண்டுகளை வீசின. சிறிது சேதம் ஏற்பட்டது.

அக்டோபர் 9.—நேற்றிரவு பிரிட்டிஷ் விமானப் படைகள் ஹனேவர், ப்ரெமென், பெர்லின் என்னும் நகரங்களையும் ரூர் பிரதேசத்தையும் கடுமையாகத் தாக்கி சுமார் 120 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின.

ரஷ்யாவோடு சமரசம் செய்து கொள்ள முடியாமற் போகவே ஸ்பெயின் மூலமாகவும் போர்த்துக்கல் மூலமாகவும் இங்கிலாந்துடனும் அமெரிக்காவுடனும் சமரசம் செய்து கொள்ள ஜெர்மனி முயற்சிப்பதாகத் தெரிகிறது.

படாக்ளியோவோடு தான் கலந்து பேசியதைக் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அறிவிக்கும் பொருட்டு, மிஸ்டர் ஹெரால்ட் மாக்மில்லன் லண்டனுக்கு வந்திருக்கிருர்.

அக்டோபர் 9.—எட்டாவது விமானப் படை, அங்லம், எரன்ப்ரோ, டான்சிக், க்டைனியா ஆகிய இடங்களைத் தாக்கியது.

அக்டோபர் 11.—பிரிட்டிஷ் சாம்ராஜ்ய விமான மகா நாடு லார்ட் பீவர்ப்ரூக் தலைமையில் லண்டனில் ஆரம்பமானது.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

அக்டோபர் 6.—இந்த யுத்தத்தில் கிடைக்கும் வெற்றி காரணமாக, விரைவில் பிலிப்பைன் தீவுகளுக்கு சுயாட்சி வழங்கப்படக் கூடுமென்று அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்க அரசாங்க சபைக்கு ஒரு செய்தி விடுத்தார்.

அக்டோபர் 9.—கொலம்பியாவில் போலீசாருக்கும் போக்குவரவுத் தொழிலாளருக்கும் நடைபெற்ற கலவரத்தில், 7 பேர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயப்பட்டனர். இது காரணமாக கொலம்பியா மந்திரி சபையினர் தம் பதவிகளை ராஜிநாமா செய்து விட்டனர். இந்த ராஜிநாமாக்களை, தலைவர் ஒப்புக் கொண்டு புதிய மந்திரிகளை நியமித்திருக்கிருர்.

அக்டோபர் 9.—அமெரிக்க யுத்த உற்பத்தித் தலைவர் மிஸ்டர் டொனல்ட் நெல்சன் மாஸ்கோவிற்குப் போய்ச் சேர்ந்தார்.

அக்டோபர் 12.—அத்லாண்டிக் சமுத்திரத்தில் போகும் வியாபாரக் கப்பல்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு ஆஸோர்ஸ் தீவுகளில் பிரிட்டனுக்குச் சில வசதிகள் அளிக்க போர்த்துகல் அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கின்றதென்று மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் இன்று அறிவித்தார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

அக்டோபர் 6.—பிவின் மாணுக்கர்களின் 8-வது கோஷ்டி இந்தியாவிலிருந்து போய் இங்கிலாந்து சேர்ந்து விட்டதென்று தகவல் கிடைத்திருக்கிறது.

மணிலா, கலிவா, மேல்சிந்துவின் ஆகியவற்றை அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் கடுமையாகத் தாக்கின.

அக்டோபர் 7.—தென் கிழக்காசியாவின் பிரதம படைத்தலைவரான மேன்மை தங்கிய லார்ட் லூயி மௌண்ட் பாட்டன் தன்னைச் சார்ந்த உத்தியோகஸ்தர்களோடு நியூ டில்லி வந்து சேர்ந்தார்.

5 நிமிஷங்களில் பெரிய எண்ணெய் சுத்தி செய்யும் சாலையும் கிடங்கும் பர்மாவில் நாசமாக்கப்பட்டது. எண்ணெய்ப் பகுதியான யதையாவும் நாசஞ் செய்யப்பட்டது.

அக்டோபர் 8.—நேற்று அமெரிக்க வெடி குண்டு விமானங்கள் சிங்கெய்ங் மியோ என்னும் ரயில்வே ஸ்டேஷனைக் கடுமையாகத் தாக்கி, லைனுக்கும் இஞ்சின்களுக்கும் வண்டிகளுக்கும் பெரும் சேதத்தை உண்டாக்கின.

அக்டோபர் 9.—இந்திய தரைப் படைகள் இத்தாலியில் நேசநாட்டுப் படைகளோடு சேர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றன.

லார்ட் லூயிமௌண்ட் பாட்டனோடு கலந்து பேசும்பொருட்டு, சீன அந்நிய நாட்டு மந்திரியான டாக்டர் டி. வி. சூங் புது டில்லிக்கு வந்து சேர்ந்தார்.

அக்டோபர் 12.—நேற்றிரவு ஜப்பான் விமான மொன்று சென்னையைத் தாக்கியது.

இலங்கையின் கிழ்கரையில் தென்பட்ட எதிரி விமான மொன்று நாசமாக்கப்பட்டது.

லார்ட் லூயிமௌண்ட் பாட்டனை மேன்மை தங்கிய வைசிராய் பிரபு வரவேற்ருர்.

ரஷ்யாவும் பின்லந்தும்.

அக்டோபர் 8.—தாமான் தீபகற்பத்தை ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டனர். இரண்டு நாட்கள் கடும் போராடி நெவல் என்னும் பட்டணத்தையும் பிடித்தனர்.

ரஷ்யாவிடமிருந்து தாம் கைப்பற்றிய நாடுகளைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும், தம்மோடு சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஜெர்மானியர், ஜப்பான் மூலமாக ரஷ்யாவை கோரினர்கள் : ஆனல், ரஷ்யர்கள், இந்த நிபந்தனைக்கு இணங்காமல், ஜெர்மானியர் கைப்பற்றியுள்ள எல்லா நாடுகளையும் திருப்பிக் கொடுத்து விடவேண்டு மென்றும், ஹிட்லரைப் பிடித்துத் தம் வசம் ஒப்புவிக்கவேண்டு மென்றும் கோரினர்கள்.

செம்படைகள் விடெப்ஸ் நோக்கி 120 குடியிருப்புக்களைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

விடெப்ஸ்க்குப் போகும் பாதையில் 150 இடங்களை ரஷ்யர்கள் கைப்பற்றினர்கள்.

அக்டோபர் 11.—கோமல் பட்டணத்தின் எல்லைப்புரப் பகுதிகளில் ரஷ்யப் படைகள் புகுந்துவிட்டன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்யதரைக் கடல்.

அக்டோபர் 6.—வால்டர்னே ஆற்றிற்கு அப்பால், நேப்பில்ஸுக்கு 17 மைல் தூரத்திலுள்ள ஒரு கேந்திர ஸ்தானத்தையும் அவெர்ஸா, மட்டொலனி என்னும் இடங்களையும் 5-ம் படை கைப்பற்றிக் கொண்டது. இரவில் வெகு நேரங்கழித்து வால்டர்னே ஆற்றைக் கடந்து முன்னேறுகிறது. ரோமாபுரிக்கு முன்புள்ள முதல் ஜெர்மன் அரணில் பிளவு கண்டுவிட்டது.

எட்ரியாடிக் கடற்கரையிலுள்ள ஜெர்மன் டடைத்தலைவர் கைதி செய்யப்பட்டார்.

அக்டோபர் 7.—மத்யதரைக் கடலில் பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் 6 எதிரிக் கப்டல்களை மூழ்கடித்து 2 கப்பல்களைச் சேதப்படுத்திவிட்டன.

நேப்பில்ஸ் தபாலாபீசு, ஜெர்மானியர்கள் வைத்திருந்த தாமதித்து வெடிக்கும் வெடிகுண்டு வெடித்ததனுல், தகர்ந்து விட்டது. கபுவா என்னுமிடத்தை 5-ம் படை கைப்பற்றிக்கொண்டது.

அக்டோபர் 9.—கபுவாவிற்குத் தெற்கே 7 மைல் தூரத்திலுள்ள ஒரு முக்கியமாள ரயில்வே ஜங்ஷனை நேசநாட்டுப் டடைகள் கைப்பற்விட்டன.

க்ரீசில் பலவிடங்களிலும் விமானப் போராட்டம் நடைபெற்றது.

ஜெர்மன் போலீசாருக்கும் இத்தாலியப் பொது மக்களுக்கும் ரோமாபுரித் தெருக்களில் கலகம் நடந்தது.

ஷியாங்கெய் ஷேக், சீனக் குடியரசுத் தலைவர் பதவியை இன்று எற்றுக் கொண்டு விசுவாசப் பிரமாணம் செய்தார்.

அக்டோபர் 10—மடாங்கை நோக்கி ஆஸ்திரேலியப் படைகள் முன்னேறின. போகன்வில்லா என்னுமிடத்தை வெடிகுண்டுகளால் தகர்த்து விட்டனர்.

அக்டோபர் 11.—மத்திய சாலமன் தீவுகளிலுள்ள விலாவும், சாந்தா இசாபெல்லும் கைப்பற்றப்பட்டன. விவாக் தீவு மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டது.

அக்டோபர் 12.—100 இத்தாலியக் கப்பல்களுக்கு மேல் நேசநாட்டினர் ஆதிக்கத்திற்குட்பட்டு விட்டன.

விஷி, சுயேச்சை பிரான்சும் எதிரிகள் கைப்பற்றிய நாடுகளும்.

அக்டோபர் 6.—யுகோஸ்லாவ் தேச பக்தப் படைகள் லுஸ்ஸின் என்னும் தீவைக் கைப்பற்றிக் கொண்டன.

அக்டோபர் 7.—க்ரீசில் உணவுப் பஞ்சம் உண்டாகலாம்.

அக்டோபர் 8.—மான்டிநீக்ரோவிலுள்ள உலட்சினி, புகுவா ஆகிய இடங்களில் செக் படைகள் போய் இறங்கிவிட்டன.

அக்டோபர் 11.—க்ரோஷிய அரசாங்க மந்திரிகள் ராஜிநாமாச் செய்துவிட்டனர்.

ருமேனியாவிலுள்ள 17 வயதுள்ள யூதர்கள் அனைவரும் கட்டாயமாகத் தொழிலாளர்களாகத் தம்மை பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு கட்டளை பிறந்திருக்கிறது.

கிழக் கோடி நாடுகள்.

அக்டோபர் 6.—ஜப்பானியர்களுடன் போராடுவது பற்றி அட்மிரல் இங்கும் அட்மிரல் ஹால்சியும் கலந்து பேசி முடிந்துவிட்டார்கள்.

நியூ கினியிலுள்ள கெய்குலின் என்னும் இடம் கைப்பற்றப்பட்டது. வேக் தீவு வெடி குண்டுகளால் தாக்கப்பட்டது.

16 வயதிற்கு மேல் 25 வயதிற்குட்பட்ட கலியாணமாகாத ஜ்ப்பானியப் பெண்கள் எல்லோரும் யுத்த வேலைக்காகத் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு கட்டளை பிறந்திருக்கிறது.

அன்வெய் மாகாணத்திலுள்ள ஸ்கென்செங் என்னுமிடத்தை படைகள் கைப்பற்றிக்கொண்டன.

அக்டோபர் 7.—டம்புவுக்கு ஆஸ்திரேலியப் படைகள் வந்து சேர்ந்தன.

அக்டோபர் 8.—விலாவிலிருந்தும் கொலம்பங்காராவின் தென் பகுதியிலிருந்தும் ஜப்பானியர்கள் வெளியேறிவிட்டார்கள்.

அக்டோபர் 9.—கொலம்பங்காராவை விட்டுக் காலி செய்ய முயன்ற ஜப்பானியர்களை அமெரிக்கப் படைகள் தடுத்துப் போராடி ஒரு க்ரூயிசர் கப்பலையும் இரண்டு நாசகாரிகளையும் மூழ்கடித்தன. மற்றிரண்டு நாசகாரிகளைப் பெருஞ் சேதப்படுத்தின. அன்றியும் அநேக படகுகளையும் நாசப்படுத்தின. வடமேற்குப் பகுதியிலுள்ள அம்பன் என்னும் கடற்கரையிலுள்ள விமானத்தையும் வெடி குண்டுகளால் தாக்கின.

அக்டோபர் 12.—டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள மக்காசர் என்ற இடத்தையும், இளாஸ்டர் முனை என்னும் ஒரு கேந்திர ஸ்தானத்தையும், முண்டாவையும் நேசநாட்டு விமானங்கள் வெடிகுண்டுகளைக் கொண்டு தாக்கின.

அக்டோபர் 8.—அரபு நாடுகளின் நன்மையைக் குறித்து நஹாஸ் பாட்சாவுடன் கலந்து பேசும் பொருட்டு, இபு சாட் மன்னரின் அந்தரங்கக் காரியதரிசி எகிப்தை விட்டுப் புறப்பட்டுவிட்டார்.

அக்டோபர் 12—போர்த்துகலுக்குத் தாம் இறுதிக் கடிதம் அனுப்ப வில்லை யென்று ஜப்பானிய அந்நியநாட்டுக் காரியாலயத்தார் மறுத்துவிட்டனர்.

ரூ. 5,000 ரூ. 1,000

பரிசுகள்

எதிரி உளவாளிகள் யார் ?

எதிரிக்கு உதவி செய்கிறவர்கள் யார் ?

பிடித்துக் கொடுத்தால் ரூ. 5,000 வரை பரிசு

அவர்களைக் கைது செய்யத் தக்க தகவல் கொடுப்பவர்களுக்கு

ரூ. 1,000 வரை பரிசளிக்கப்படும்

- 1. சந்தேகத்திற் கிடமான கப்பல் நடமாட்டங்கள் ; குறிப்பாக, கடலோரங்களில் நடமாட்டங்கள்,
- 2. அந்நியர்கள் இராணுவ உடுப்புக்களுடனும் ஆயுதங்களுடனும், அல்லது அவையின்றியும், கூட்டமாகவோ, தனித் தனியாகவோ காணப்பட்டால்,
- 3. நேச நாட்டு விமானங்கள் அல்லாதவை தரையிலோ ஆகாயத்திலோ காணப்பட்டால்,
- 4. அவற்றிலிருந்து விமானக் குடைகளின் உதவியால் யாராவது இறங்கினாலும், எதையாவது இறக்கினாலும்,
- 5. தரையிலோ, கடலிலோ, ஆகாயத்திலோ எதிரி நடமாட்டம் பற்றிய குறிப்புக்கள் ஆகிய தகவல்களைக் கொண்டு எதிரிகளின் உளவாளிகள் கைது செய்யப்பட்டால்,

இந்தப் பரிசுகள் கொடுக்கப்படும்

உளவாளிகள் கிடைத்தாலும் அல்லது தகவல் கிடைத்தாலும் கிராமப் பெரியதனக்காரருக்காவது போலீசாருக்காவது கூடிய சீக்கிரம் தெரிவிக்க வேண்டும் ; அல்லது கைது செய்யப் பட்டால், அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டும்.

பரிசுத் தொகை பெற விரும்புவோர் அது சம்பந்தமான முழு விவரங்களும், சாட்சிகளின் பெயர்கள், விலாசங்கள், வாக்கு மூலங்கள் ஆகியவற்றுடன் ஜில்லா கலெக்டருக்காவது ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்காவது அனுப்ப வேண்டும்.

இந்தப் பரிசுகள் சாதாரணமாக படை உத்தியோகஸ்தர்களுக்கும், சிவில் இலாக்காக்களிலுள்ள கெஜடெட் உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப்படமாட்டா. ஆனால், சில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்தியா அரசாங்கத்தின் அனுமதி பெற்று அவர்களுக்கும் வழங்கப்படும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.